# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC. 348/2022 | Village | : | |
| Prosecution witness | : | PW-9 | Taluk | : | |
| Name | : | திரு.பழனி | Occupation | : | |
| Father Name | : | திரு. முனுசாமி | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 27.10.2025**

All accused present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் பசுபதிகோவிலில் வசித்து வருகிறேன். நான் சமையல் கான்ட்ராக்ட் எடுத்து வேலை செய்துவருகிறேன். நான் சமையல் கான்ட்ராக்ட் எடுக்க ராஜகிரி போயிருந்தேன். திரும்பி வரும்போது நான் குடியிருக்கும் வீட்டு உரிமையாளர் நெடுந்தெரு அருகே நின்றுகொண்டிருந்தார். எதற்காக நிற்கிறார் என்று கேட்டேன். அப்போது அவர் அவருடைய சகலையின் அப்பாவை கொலை செய்துவிட்டார்கள் என்று சொன்னார் அங்கு வந்த போலிஸார் தெற்கு வடக்கு பார்த்து எழுதி கொண்டு கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது, 2வது கையெழுத்து என்னோடு வந்த பாயுடையது பெயர் ஞாபகத்தில் இல்லை. அந்த கையெழுத்து அ.த.சா.ஆ.3 ஆகும்.போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

நான் கையெழுத்து போட்ட ஆவணம் எழுதியிருந்ததா என்றால் தெரியவில்லை. நான் கையெழுத்து போட்ட ஆவணம் தட்டச்சு செய்யபட்டதா எழுதபட்டிருந்தா என்றால் அதை கவனிக்கவில்லை. நான் மேற்படி அ.த.சாஆ.3 கையெழுத்தை சொன்ன நேரம், இடத்தில் கையெழுத்து போடவில்லை என்றும் காவல்நிலையத்தில் வைத்து போட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.